விலை சதம் 10

# சுதந்திரன்

SUTANTIRAN

வ. ஆ. 2001, பங்குனி 26 உ புதன் (8-4-70) ஸபர் பிறை 1 —புத்தகம் 24 இதழ் 8

உடுப்பிட்டியில்

# யூ. என். பி - சமசமாஜி கூட்டணி!

## கம்யூனிஸ்'ட்டுக்கு காலை வார சதி?

உடுப்பிட்டி, ஏப். 7

இலங்கை முழுவதும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், சுதந்திரக் கட்சிக் கூட்டணிக்கும் யூ. என். பி.க்கும் நேரடி மோதல் ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் உடுப்பிட்டித் தொகுதில் மட்டும் யூ. என் பி.யும் சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட், தமிழரசு வேட்பாளர்களுக்கு எதிராக கூட்டுச் சேரவிருப்பதாக இப்பகுதியில் பேசிக் கொள்ளப்படுவது பலருக்கு ஆச்சரியத்தை அளித்திருக்கிறது.

யூ. என். பி. என்று இங்கு நாம் குறிப்பிடுவது வட பகுதி யூ. என். பி.யான தமிழ் காங்கிரசைத் தான். தமிழ் காங்கிரசுக்கும் சமசமாஜக் கட்சிக்கும் உடுப்

(4ம் பக்கம் பார்க்க)

## "மகாவலி வடக்கே வராது"

பத்தேகம, ஏப். 8—

''மகாவலியை வடக்கே திருப்புவது ஒருபோதுமே சாத்தியமாகாது; அரசாங்கம் ஆசைப்படலாமே தவிர இது நடவாத காரியம்.''

—இவ்வாறு பத்தேகமவில் நடைபெற்ற சமசமாஜக்கட்சிக் கூட்டமொன்றில் பேசிய பத்தேகம முன்னாள் பா. உ. திரு. நீள் டீ அல்விஸ் தெரிவித்தார்.

பௌத்த பிக்குகள் தூதுக்குழுவுக்கு யூ. என். பி. அளித்த வாக்குறுதி!

# பௌத்தம் மட்டுமே அரசாங்க மதமாகும்!


கொழும்பு, ஏப். 7—

இந்நாட்டில் பௌத்தம் மட்டுமே அரசாங்க மதமாக இருக்கவேண்டும் என்பதை கொள்கையளவில் யூ. என். பி. ஏற்றுக்கொள்வதாக தலைமைப்பேட்டிகண்ட பௌத்த பிக்குகள் குழு ஒன்றிடம் யூ. என். பி. தலைமைப்பீடம் கூறியுள்ளதாக தெரியவருகிறது. இச்சந்திப்பு கடந்த வார இறுதியில் சிறீ கோதாவில் நடைபெற்றதாம்.

இச்சந்திப்பின் போது, பௌத்தத்தை அரசாங்கமதமாகப் பிரகடனப் படுத்துவோம் என்ற ஒரு வாக்குறுதியை யூ. என். பி.யின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கவேண்டுமென பிக்குகள் குழு வற்புறுத்தியதாக அறியப்படுகிறது.

ஆனல் யூ. என். பி. தலைமைப்பீடம் அப்படிச் செய்வது இன்றைய நிலையில் புத்தி பூர்வமாகாது என்று மறுத்துவிட்டதுடன், பௌத்தத்தை அரசாங்கமதமாக்க வேண்டுமென்பதை கொள்கையளவில் தாம் ஏற்றுக் கொள்வதாக உறுதிமொழி அளித்ததாம். ஆனல் இது யாருக்கும் பாதகம் ஏற்படாத முறையில், சாதுரியமாக காலப்போக்கில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு திட்டம் என்றும் யூ. என். பி. தலைமைப் பீடத்தில் சுட்டிக் காட்டப்பட்டதாக தெரிகிறது.

அதே நேரத்தில் வடக்கில் பௌத்த பாடசாலைகளைத் திறந்து பௌத்த விகாரைகளைக் கட்டி பௌத்தத்துக்கு இந்துக்களை மதமாற்றம் செய்யத் துணிந்தது யூ. என். பி. தான் என்றும் இது வேறு எந்த ஒரு சிங்களக் கட்சியும் செய்யாத சாதனையென்றும் யூ. என். பி. தலைவர்களால் எடுத்துக்காட்டப் பட்டதாம். பௌத்த மக்களின் கோரிக்கைக்கு மதிப்புக் கொடுத்து மாவட்ட சபை மசோதாவையும், திருமலை புனிதநகர் திட்டத்தையும் கைவிட்டது யூ. என். பி. என்றும் தமது சாதனைபற்றி யூ. என். பி. தலைவர்கள் பெருமை பேசியதாக சொல்லப்படுகிறது.




# வவுனியா சிவசிதம்பரத்துக்கு வாக்குவேட்டையாட சென்றவர் வஞ்சியிடம் வாங்கிக கட்டிய பரிதாபம்!

## முள்ளியவளையில் நடந்த ருசிகர சம்பவம்!

வவுனியா சிவசிதம்பரத்துக்காக குடிவெறியுடன் வாக்குவேட்டையாடச் சென்ற ஒருவர் தமிழ் பெண் ஒருவரிடம் வகையாக வாங்கிக்கட்டிக் கொண்டாராம். இச் சம்பவம் முள்ளியவளையில் நடந்ததாகத் தெரியவருகிறது.

குறித்த சம்பவம் பற்றி நமது முள்ளியவளை நிருபர் எழுதுவதாவது:-

25-3-70ந் திகதி முள்ளியவளை வட்டாரத்தில் வசிக்கும் ஒருவரின் வீட்டிற்கு ஒருவர் போயிருந்தார். அவருக்கு அவ் வீட்டுக்காரர் வேலை செய்த கூலிப் பணம் கொடுக்க வேண்டியிருந்தது. காசு பெறுவதற்குத்தான் அவர் வருகின்றார் என அவ் வீட்டுத் தலைவி கருதினள்.

அப்போது வீட்டுத் தலைவர் தனது காரியாலயத்திற்குச் சென்றிருந்தார். அங்கு சென்றிருந்தவர் நல்ல மது போதையில் இருந்தாராம்.

சென்றவர் தனக்குரிய கூலிப்பணத்தைக் கேட்பார் எனக்கருதிய அவ்வணங்கின் எண்ணத்திற் கெதிர்மாறுகத் தொடங்கினர் தேர்தல் விடயம் பற்றிக் கதைப்பதற்கு!

'செல்லத்தம்புவுக்குதுண்டு போட்டுவிட்டு நாம் என்ன செய்கிறது. அவரின் குணம் நடை நன்றாக எங்களுக்குத் தெரியாது.

'சிவசிதம்பரம் என்றால் எங்களுக்குத் தெரிந்த மனிதன். எங்கள் எண்ணப்படி நடக்கக் கூடிடியவர் அது இது என்று ஏதேதோ உளறினராம். இவரிடம் அப்பெண் தேர்தல் சம்பந்தமாக எதுவிடயமும் பிரலாபிக்கவில்லையாம்.

இவர் பேசிய இழிதரமான பேச்சைக்கேட்ட அம்மாதுக்கு பொத்திக்கொண்டு வந்தது கோபம்.

நீர் ஏன் வந்தனீர்? தேர்தல் கதை கதைப்பதற்கு இது வல்ல இடம். உங்கள் சிவசிதம்பரம் உம்போன்றவர்களுக்கு உதவி செய்பவர் என்பது நீர் சொல்ல வேண்டாம். அதுவிடயம் எமக்குத் தெரியும். உங்கள் வாய் இப்போது பேசவில்லை. ஓசியில் கிடைத்த மதுதான் உம்மைப் பேசவைத்துள்ளது. போம்; தேர்தல் என்றால் கள்ளுக்கும் சாராயத்திற்கும் வாக்குரிமையளிப்பது எனக் கருதும் சோற்றுப்பருத்திகளே சோதாக்கும்பலே! உங்களுக்கு தேர்தல் என்றால் என்ன என்று தெரியுமா? அல்லாமலும் உம்மிடம் யார் இப்போது தேர்தலைப் பற்றிப் பேசியது. ஏதோ தேர்தல் முடியும் வரையாவது வயிறு நிறைய அருந்துங்கள் மதுவை' என்று செருப்பால் அடித்தது போல பதில் சொன்னராம்.

குறித்த பெண்மணியின் சொல்லின் கடுமை தாங்க முடியாத ஆசாமி தலைகுனிந்தபடி நடையைக்கட்டினராம்.

## டி. எஸ். செய்த மகத்தான சேவை என்ன?

ஆர். ஜி. சொல்கிறார்!

—கொத்மலி ஏப் 7

'டி. எஸ். சேனநாயகா தூரதிருஷ்டியும் அரசியல் முதிர்ச்சியும் உள்ள ஒரு தலைவர். அவர் கல்லோயா, கந்தளாய் பதவியா போன்ற குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து சிங்களவரைக் குடியேற்றியிருக்காவிடின் நாட்டின் அரைவாசிப்பகுதி தமிழர்களின் கையிலிருந்திருக்கும்'

—இவ்வாறு கொத்மலித் தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசிய திரு. ஆர். ஜி. சேனநாயக கூறினர்.

## குருஜியும் பிழைவிடுகிறரா?

''தமிழ்மொழி எந்தச் சந்தர்ப்பத்திலும் யாராலும் அழிக்கப்பட முடியாதது என்பதை உணராமல் 'தமிழ் உரிமை'க்காகப் போராடுகிறேம் என்று சொல்லும் தலைவர்கள் பிழைவிடுகிறார்கள்'' -சாவகச்சேரி வி. குமாரசுவாமி (டெயிலி மிரர் 4-3-70)

''சிங்கள மொழியைப் போல் தமிழுக்கு அந்தஸ்துப்பெற ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் நான் போராடி வருகிறேன்'' —ஜி. ஜி. (வீரகேசரி 2-4-70)

## 'சமஷ்டியே ஏற்றது'

இந்திய நாட்டுக்கு சமஷ்டியரசியலமைப்புமுறையே சிறந்தது என்று இந்திய கம்யூனிஸ்ட் பெருந்தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி கருத்து தெரிவித்திருக்கிறார். டெல்லியில் நடந்தமத்திய-மாநில உறவுகள் பற்றிய கருத்தரங்கொன்றில் அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

தி. மு. க. பொதுச்செயலாளரும் தமிழக கல்வி அமைச்சருமான இரா. நெடுஞ்செழியனும் மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட சமஷ்டி அரசியல் முறையே இந்தியாவுக்கு ஏற்றதென்று வலியுறுத்தினர்.

# எண்ணம்

## பிரதமருக்கு ஒரு சவால்!

பௌத்த பிக்குகளின் விருப்பங்களுக்கெல்லாம் தாளம் போட்டு ஆடுபவர் பிரதமர் டட்லி சேனநாயகா என்பதை இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்கள் பல தடவைகளில் நிதர்சனமாக கண்டிருக்கிறார்கள்- 20 இலட்சம் இந்துக்களின் கோரிக்கையை ஒரு பௌத்த பிக்குவின் எதிர்ப்புக்கு அஞ்சி ஏற்றுக்கொள்ள மறுத்தவர் இதே பிரதமர் டட்லி சேனநாயகாதான் என்பது நாடறிந்த உண்மையாகும்.

இப்போதுகூட ஒரு பௌத்த பிக்கு, யூ, என். பி. அரசாங்கம் பௌத்த சமயவளர்ச்சிக்கு என்ன செய்திருக்கிறது என்று கேள்வியெழுப்பியவுடன் விழுந்தடித்துக்கொண்டு தமது ஊதுகுழல்களான ஏரிக்கரைப்பத்திரிகைகள்மூலம் பௌத்தர்களுக்கு தாம் செய்த சேவைகள்பற்றி மிகப்பெரிய பட்டியலொன்றையே தந்திருக்கிறார் பிரதமர் டட்லி சேனநாயகா.

முதன் முதலாக, என். எம். பெரேரா எதிர்த்தபோதும் அரசாங்கப் பொதுப்பணத்தை பௌத்த சமய வளர்ச்சிக்கு ஒதுக்கியது தானேயென்றும் பெருமைப்பட்டிருக்கிறார் பிரதமர்.

நல்லது; பெருமைப்படட்டும்; பௌத்தசமய வளர்ச்சிக்கும் உதவட்டும்; நாம் அதைக் குறை கூறவில்லை.

ஆனால் பௌத்த சமயத்துககு—அதன் வளர்ச்சிக்கு—இன்னது இன்னது செய்தேன் என்று நீண்ட பட்டியலைத் தந்திருக்கும் பிரதமரால், ஏனைய சிறுபான்மையோரது மதங்களுக்கு தமது அரசாங்கம் செய்துள்ள நன்மைகள்பற்றி ஒரு சிறு பட்டியலாவது தரமுடியுமா என்று நாம் சவால்விடுகிறோம்.

எல்லா மதங்களின் வளர்ச்சிக்கும் பாரபட்சமின்றி உதவுவேன்; தேசிய ஐக்கியமே எனது இலட்சியம்; என்று ஒவ்வோரு மேடையிலும் முழங்கிவரும் பிரதமர்—தமது கூற்றில் அந்தரங்கசுத்தியுடையவராயிருந்தால் — பௌத்தசமயத்துக்கு தாம் என்னென்ன உதவிகள் செய்துள்ளதாகப் பட்டியல் தந்திருக்கிறாரோ அதில் அரைவாசியாவது ஏனைய இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களுக்கு செய்திருப்பதாக புள்ளி விபரங்களுடன் எடுத்துக்கூற முடியுமா என்று நாம் இடித்துக் கேட்கிறோம்!

எப்படிக் கூறமுடியும் பிரதமரால்? செய்திருந்தால் அல்லவா கூறமுடியும்?

பேசுவது தேசிய ஐக்கியம்; நடைமுறையில் பௌத்த சிங்களம்; இதுதானே டட்லி அரசாங்கம் பின்பற்றி வரும் கொள்கை? இப்படியிருக்கையில் பௌத்த மதத்துக்கு அளித்த அதே சலுகைகளை ஏனைய மதங்களுக்கு பிரதமரால் எப்படி வழங்கியிருக்கமுடியும்?

பௌத்தர்கள் தவிர்ந்த ஏனைய மதத்தினருக்கு எதிராக இந்த அரசாங்கம் எத்தனை பாரபட்சமாக—படுபாதகமாக நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றல்ல; பல சம்பவங்களை நாம் சுட்டிக்காடடமுடியும்.

திருமலை கோணேசராலயம் அமைந்துள்ள 'பெடரடிக்' கோட்டைப்பகுதியை இந்துக்களின் புனிதப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று இந்நாட்டு இந்துக்கள் அனைவரும் ஏகோபித்து விடுத்த கோரிக்கையை ஒரே ஒரு சேருவாவில பௌத்த பிக்கு எதிர்த்ததால் தனது காலில் போட்டு மிதித்தவர் இதே பிரதமர் டட்லி சேனநாயகாதான்.

தேசிய ஐக்கியத்தின் சின்னமாகவும் இந்நாட்டுத்தமிழினத்தின் பிரதிநிதியாகவும் டட்லி அமைச்சரவையிலிருந்த ஒரேயொரு தமிழ் அமைச்சரான திரு. மு. திருச்செல்வம் பதவியை உதறியெறிய நேரிட்டது இந்துக்களுக்கெதிராக காட்டப்பட்ட இந்த அப்பட்டமான பாரபட்சத்தை எதிர்த்து அல்லவா?

இந்துக்களின் பழம்பெரும் வழிபாட்டுத்தலமான கதிர்காமம், கதிரமலை முருகன் ஆலயத்தை ஒரு பௌத்த பிக்கு பலாத்காரமாக அபகரிக்க முயன்றது டட்லி ஆட்சியில் அல்லவா?

வடபகுதியில் வாழும் சிறுபான்மைத்தமிழர்களான இந்துக்களுக்கு சிறு சிறு சலுகைகள் காட்டி பௌத்தர்களாக்கும் முயற்சியில் ஈடுபட்டது டட்லி அரசாங்கமல்லவா?

இந்திய யாத்திரைக்கு அந்நிய செலாவணி வழங்குவதில் பௌத்தர்களுக்கு ரூபா 500 என்றும் இந்துக்களுக்கு ரூபா 3(0 என்றும் பாரபட்சம் காட்டப்படுவதை பலமுறை பாராளுமன்றத்திலும் வெளியிலும் சுட்டிக்காட்டியும் ஏதாவது பலன் கிடைத்ததா? பாரபட்சம் களைந்தெறியப்பட்டதா?

எதுவுமே நடக்கவில்லை.

இப்படி இந்துக்களுக்கும், ஏனைய கிறிஸ்தவ இஸ்லாமிய மதத்தினருக்கும் டட்லி அரசாங்கம் காட்டியிருக்கும் பாரபட்சங்களும் செய்துள்ள அநீதிகளும் ஏராளம்.

எப்படி சிங்களம் மட்டும் ஆட்சிமொழியென்று கொண்டு வரப்பட்டு தமிழ்மொழி தாழ்த்தப்பட்டதோ அதேபோல பௌத்தம்மட்டுமே சட்டபூர்வமாக அரசாங்க மதமாக்கப்பட்டு ஏனைய மதங்கள் தாழ்த்தப்படும் காலம் அதிக தூரத்திலில்லை.

ஆகவே மதரீதியில் சிறுபான்மையினராக இருக்கும் இந்த நாட்டு இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் ஒரேயணியில் இணைந்து நின்று தங்கள் உரிமைகளை காப்பாற்றப் போராடவேண்டும்; இன்றேல் பௌத்த சிங்கள வெறியிலிருந்து அவர்கள் தப்பிப்பிழைப்பது துர்லபமாகிவிடும்,

பிரதமரது அறிக்கை சூட்சுமமாக அறிவுறுத்தும் உண்மை இதுதான்!

# கடவுள் திருவுருவங்களை அரசியல் கேலிச்சித்திரங்களுக்கு பயன்படுத்தலாமா?

## சைவ அறிஞர்கள் முன் ஒரு பிரச்சினை

கடவுளின் திருவுருவங்கள் -அவை எச்சமத்தவருடையதாளுலும் சரி புனிதத்தன்மையுள்ளவை:பூஜிக்கப்படவேண்டியவை;மக்களின் நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் உரியவை. அவற்றை விளம்பரங்களுக்கோ, அரசியல் கேலிச்சித்திரங்களுக்கோ அன்றி இது போன்ற வேறு அற்பகாரியங்களுக்கோ உபயோகிப்பது சம்பந்தப்பட்ட மக்களின் மத உணர்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் ஊறு தேடுவதாகும்: மத உணர்ச்சிகளைப் புண்படுத்துவதாகும். இதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். நாத்திகர் என்று ஆத்திகர்களால் பட்டம் சூட்டப்பட்ட அறிஞர் அண்ணு கூட சமய நம்பிக்கை படைத்த மக்களது உள்ளங்களைப் புண்படுத்தாமல் நடந்துவந்தாரென்பது எல்லோரும் அறிந்த உண்மை.

இந்த அடிப்படையில் தான், 3·4-70 தினபதியில் வெளிவந்த கேலிச்சித்திரத்தில் தமிழரசுத் தந்தையை அரசியல் பழிவாங்கும் நோக்குடன் சூரபத்மனுக்கி, எதிரே தமிழ்க் கடவுளாம் முருகனை (அதுவும் இரு கைகளில் ஒரு கையில் வாளேந்திய படி சித்திரிக்கப்பட்டிருக்கிறது.இப்படியொரு வடிவமே முருகனுக்கு கிடையாது.) மாவிட்டபுரம் முருகன் என்று 'லேபல்' எழுதி எதிரே நிற்க வைத்து சின்னத்தனம் செய்திருந்ததை நாம் வன்மையாக கண்டித்திருந்தோம்.

தமிழரசுத்தந்தையை எப்படியாவது சித்திரிக்கட்டும்-அதுபற்றிநமக்கு கவலையில்லை; ஏனெனில் அரசியலில் எதிர்ப்பின் மத்தியிலே வளர்ந்தவர் தமிழரசுத் தந்தை. ஈழத்து காந்தி'யென்று பட்டம்சூட்டியவர்களே இன்று அவரை சூரபத்மனுக்கி மகிழ்ந்துவிட்டுப் போகட்டும்.

ஆனால்...!

அரசியல் இலாபத்துக்காக, அரசியல் பிரச்சினைக்குள் - இந்துக்கடவுளின் திருவுருவத்தை இழுத்து கேலிச் சித்திரம் வரைவதை சைவ உலகம் ஏற்கப் போகிறதா? சைவப் பேரறிஞர்கள் அனுமதிக்கப் போகிறார்களா?

சைவ மதக்கடவுளை அரசியல் கேலிச் சித்திரத்துக்கு பயன் படுத்தும் தினபதியை வெளியிடும் குணசேன நிறுவனம் தனது பத்திரிகையில் எப்பொழுதாவது புத்தபிரானை கேலிச் சித்திரத்துக்குப்பயன்படுதியிருக்கிறதா'' அல்லது பயன் படுத்துமா?

நபிகள் நாயகத்தையோ புத்தபிரானையோ கேலிச் சித்திரமாக்கினல் அந்தந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் இதற்கிடையே எத்தனை கிளர்ச்சி செய்திருப்பார்கள்! சைவ சமயத்தவர்கள் மட்டும் கண்ணை மூடிக்கொண்டு இருக்கப்போகிறார்களா?

இந்நிலையில் மாவிட்டபுரம் கந்தசாமிகோவில் ஆதீனத்தைச் சேர்ந்த பிரமஸ்ரீ எஸ். டி. சண்முகநாதக் குருக்கள் 4-4-70 திகதியிட்டு நமக்கு எழுதிய கடிதமொன்றில் முருகனை 'தினபதி' கேலிச் சித்திரமாக வெளியிட்டதில் என்ன தவறு என்று கேட்டிருக்கிறார். அதாவது இந்துக் கடவுளரின் உருவங்களை ஒவ்வொருவரும் தம் இஷ்டபபடி கேலிச் சித்திரங்களாக வரையலாம். அரசியல் சேற்றுள் இழுக்கலாம்; அதில் தவறில்லையென்பதே அவரது கருத்தாக தொனிக்கிறது.

எனவே நாம் இந்த நாட்டிலுள்ள சைவமக்கள் முன்-சைவ சமய சங்கங்கள் முன்- சைவப் பேரறிஞர்கள் முன்பு இப்பிரச்சினையைச் சமர்ப்பிக்கின்றோம். பிரச்சினை இதுதான்: சைவ சமயக் கடவுளர் திருவுருவங்களை ஒவ்வொருவரும் தாம்தாம் விரும்பியபடி தங்கள்தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு கேலிச் சித்திரங்களாக போடுவதை சைவர்கள் அனுமதிக்கிறார்களா இல்லையா? இதுபற்றி சைவ மன்றங்கள், சைவ அறிஞர்களிடமிருந்து அபிப்பிராயங்களைக் கோருகிறோம்.

—ஆசிரியர்.

## தமிழரசு பிரசாரக் கூட்டங்கள்

மாவிட்டபுரம் ஏப்-6

தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்கள் சூறுவளி வேகத்தில் நடைபெற்று வருகின்றன.

தமிழரசுக் கட்சியின் சார்பில் வடக்கில் உள்ள தொகுகளில் போட்டியிட இருக்கும் அபேட்சர்களை ஆதரித்து தீவிர பிரசார வேலைகள் நடை பெற்று வருகின்றன.

கூட்டங்கள் நடக்கும் திகதிகளும், இடங்களும் பின் வருமாறு:—

7-4-70 —நல்லூர் கோண்டாவில், 8-4-70 கிளிநொச்சி. துணுக்காய், 10-4-70 ஊர்காவற்றுறை. 11-4-70 உடுவில் 12-4-70பருத்தித்துறை, 13-4-70 சாவகச்சேரியில் மகாநாடு.

## நேற்று முதல் தேர்தல் கட்டுப்பணம் ஏற்கப்படுகிறது!

கொழும்பு ஏப்-8—

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களது கட்டுப்பாணத்தை ஒவ்வொரு மாவட்ட கச்சேரிகளிலும் நேற்று முதல் அரசாங்க அதிபர்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர். நியமனத்தினம் இம்மாதம் 23-ந் திகதி என்பது தெரிந்ததே.

ஊறணி கிறிஸ்நவர்

## கோரிக்கை நிறைவேறுகிறது!

மாவிட்டபுரம் ஏப்-5

தமிழரசு தந்தையின் அயராத முயற்சியால் ஊறணி கிறிஸ்தவ மக்களுக்கு பிரேத அடக்கச்சாலை ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட ஊறணி, தையிட்டி, மாங்கொல்லை மன்னிகுப்பை ஆகிய இடங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்களுக்கு பொதுவானதாக அமைந்திருந்த சேமக்காலை சிறியதாக உள்ளதால் பரந்த ஒரு சேமக்காலை வேண்டும் என ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்ற சங்கம் காங்கேசன் துறை பிரதிநிதி திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் மூலம் உள்ளூராட்சி அமைச்சரை கோரியிருந்ததன் பயனக நிதி ஒதுக்கப்பட்டு காணி சுவீகரிக்கப்பட இருக்கிறது;

இதற்கான காணியை யாழ் உள்ளூராட்சிசிரேஷ்ட அதிகாரிகள் பார்வையிட்டனர்'

இப்பிரதேசசாலை அமைக்க வேண்டும் என முன் காங்கேசன் துறை பட்டினசபை தீர்மானம் நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

## அவரும் சொல்கிறார்!

கிழக்கு மாகாணத்தில் கந்தளாய், கல்லோயா அல்லை போன்ற இடங்களிலும் பதவியாவிலும் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து சிங்களவர்களை குடியேற்றியவர் காலஞ்சென்ற பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகாவாகும். அவருக்கு சிங்களவர்கள் நன்றிகூறக் கடமைப்பட்டவர்கள்; வடக்கு கிழக்கு மாகாணங்கள் சிங்களவர்களுக்கே சொந்தமானவை என்று பழங்கால சிங்கள கற்சாசனங்கள் கூறுகின்றன'

—ஆர். ஜி. சேனநாயகா

குறிப்பு:- கிழக்கிலங்கையில் சிங்களவர்களை திரு. டி. எஸ். குடியேற்றிய நேரத்தில் அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்து அடிவருடி ஒத்துழைப்புக் கொடுத்தவர் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. க. கா. பொன்னம்பலம் அவர்களே!

# பட்டிருப்பில் மூட்டி மோதும் தமிழுணர்ச்சி!

—களுவாஞ்சிக்குடி ஏப்ரல்-6

தமிழரசுக் கட்சிக் கூட்டத்துக்கு கல்லெறிந்து கூட்டத்தைக் குழப்பும்திட்டத்துடன் மாற்றுக் கட்சி வேட்பாளரால் ஏவி விடப்பட்ட வாலிபர்கள் தமிழரசுத்தலைவர்கள் தந்த விளக்கம் கேட்டு மனம் மாறி கட்சியைப் போற்றிப் புகழ்ந்தபடி வீடுதிரும்பினார்கள். இந்தச் சம்பவம் பட்டிருப்புத் தொகுதியில் நடைபெற்றது.

## தமிழரசுக் கூட்டத்தை குழப்ப வந்தோர் தலைவர்கள் உரைகேட்டு மனம்மாறிய விந்தை!

பட்டிருப்புத் தமிழகம் தமிழ், தமிழரசு, தமிழ் பேசும் மக்கள் என்றகோசங்களுடன் அண்மையில் ஆர்ப்பரித்தெழுந்தது. இத்தனைக்கும் காரணம் அன்று களுவாஞ்சிக் குடியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பகிரங்கக் கூட்டமே.

தமிழரசுக்கட்சித் தலைவரும் பட்டிருப்புத் தொகுதிப் பிரதிநிதியுமாகிய திரு. சி.மூ. இராசமாணிக்கம் அவர்களது ஆதரவாளர்களால் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில்தந்தை செல்வா தளபதி அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், சொல்லின் செல்வர் திரு. செ. இராசதுரை, திருமலை வேட்பாளர் திரு.பா. நேமிநாதன் முதலியோர் புடைசூழத் தலைவர் இராசமாணிக்கம் அவர்கள் வீற்றிருந்தார்கள்.

மட்டுநகர்ப்பிரதிநிதி திரு. செ. இராஜதுரை அவர்கள் பேசும்போது, ''கற்குடாப் பிரதிநிதி திரு. தேவநாயகம் அவர்கள் தமது தொகுதிக்குப் பல சிங்கள ஆசிரியர்களை வரவழைத்திருக்கிறார் என்றும் இந்த ஆசிரியர்களெல்லோரும் சிங்களத்தில் ஜீ. சீ. ஈ; சித்தியடைந்தவர்களேயென்றும் கூறி அதே தேவநாயகத்தால் முடியுமானால் தமிழில் ஜீ. சீ, ஈ. சித்தியந்த ஒருவருக்கு ஆசிரியர் பதவி பெற்றுக் கொடுக்க முடியுமா? என்று சவால் விட்டார்.

....ளுக்கு ஏன்வேலை இடைக்கவில்லை? சிங்களவர்களே வேலையின்றித் தவிக்கும்போது தமிழ் பேசும் மக்கள் சிங்களம் படித்தவுடன் வேலை கிடைத்துவிடுமா? என்று கேட்டார்.

முடிந்து வீடுதிரும்பும்போது தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்களாகத் திரும்பிச் சென்றனர்.

கூட்டத்தைக் கலைக்கவேண்டும், கல் எறியவேண்டும், கலகம் உண்டாக்கவேண்டும் என்ற நோக்குடன் எதிர் வேட்பாளரின் வீட்டிலிருந்து ஒருமித்து திரண்டு வந்திருந்த காளையர்கள் தமிழ்த் தலைவர்களின் செந்தமிழ் முழக்கங்களைக்கேட்டவுடன் அவர்களின் தொண்டுகளைச் செவிமடுத்தவுடன் மறுகணமே தமிழ், தமிழரசு, தமிழ் பேசும் மக்கள் என்று கோசமிட்டனர்.

ஏறத்தாழ இரண்டாயிரம் பேர் வரையில் சமுகங்கொடுத்திருந்த மேற்படி கூட்டம் நடைபெற்றதன் பின் நூற்றுக் கணக்கான வாக்காளர்கள் தமிழரசுக்

## நம்பளுக்கு தமிழரசு ஒண்ணுவேணும்!

—நயினை சிவம்—

குட்டி:—
ஆமிக்காரன் படுத்தும்பாடு தாங்கல்லே மச்சான்—
இங்கே
ஆளவந்த ராஜாமாரு அடக்கல்லே மச்சான்! ஏ,
மச்சான்

மச்சான்:—
மன்னாரிலே ஆமிக்காரன் என்ன படுத்துறான்—இஞ்சே
மறிச்சுப் பேச எம். பி. போனா உதைச்சுத் தள்ளுறான்
ஆமிக்காரன் படுத்தும்பாடு தாங்கல்லே குட்டி—
இங்கே
ஆளவந்த ராஜாமாரு அடக்கல்லே குட்டி! ஏ, குட்டி!

குட்டி:—
ஆமிக்காரன் படுத்தும்பாடு தாங்கல்லே மச்சான்—
இங்கே
ஆளவந்த ராஜாமாரு அடக்கல்லே மச்சான்! ஏ,
மச்சான்!

மச்சான்!—
மீம்புடிச்ச நாங்க போனாத் தானும் தொடருறான்—
புடிச்ச
மீனையெல்லாம் எடுத்துக்கொண்டு அடிச்சு
விரட்டுறான்!
நாங்க வித்த சாமானுக்கு காசு கேட்டாக்கா—செல்வ
நாயகத்தைக் கேக்கச் சொல்லி மிரட்டிப் பேசுறான்!
ஆமிக்காரன் படுத்தும்பாடு தாங்கல்லே குட்டி—
இங்கே
ஆளவந்த ராஜாமாரு அடக்கல்லே குட்டி! ஏ, குட்டி!

குட்டி:—
பொம்பளைங்க கிட்டேயெல்லாம் வம்பு செய்யுறான்—
குடிச்ச
போதையிலே ஏதோவெல்லாம் தீது பண்ணுறான்
நம்பளுக்கு விடிவு ஒண்ணு இல்லையா மச்சான்?— இந்த
நாசத்துக்கு முடிவு ஒண்ணு இல்லையா மச்சான்?—ஏ,
மச்சான்!

மச்சான்:—
ஏ, குட்டி,
ஆமிக்காரன் படுத்தும்பாடு சின்னஞ் சிறிசுடி—நம்மை
ஆளவந்தோர் படுத்தும்பாடு இன்னும் பெரிசுடி!

குட்டி:—
ஓகோ!
ஆளவந்தார் கொடுமையெல்லாம் என்னண்ணு
சொல்லு!!—நாம
ஆண்மையோடு வாழ வழி என்னண்ணு சொல்லு!!
ஏ, மச்சான்!

மச்சான்:—
சிங்களத்தைத் தொண்டைக்குள்ளே திணிக்கிறான்!—
எங்க
செந்தமிழின் குரல்வளையை முறிக்கிறான்!—நம்ம
தங்கத் தமிழினத்தை ஒதுக்கிறான்!—வேலை
தமிழனுக்கு இல்லேயெண்டு மறுக்கிறான்!

குட்டி:—
அடி ஆத்தாடியோ!
சிங்களவன் கொடுமையெல்லாம் என்னண்ணு
சொல்லு—மச்சான்
செந்தமிழன் வாழ வழி என்னண்ணு சொல்லு!

மச்சான்:—
சங்கிலியன்—வன்னியனின் நாடெலாம்—மெல்லச்
சிங்களவன் வந்து குடியேறுறான்!—எங்க
தங்கத் தமிழ் நகராம் திருமலை—இன்று
தனதென்று ஏதேதோ பேசுறான்!

குட்டி:—
ஓகோ!

மச்சான்:—
அகப்பை புடிச்ச கையில நீ துவக்குப் புடிக்க வேணும்—
இங்கே
அநியாயமாய்ச் சாவதுக்கா தமிழன் பிறக்க
வேணும்?—எங்க
தகப்பன்—பாட்டன் மானத்தை நாஞ் சரியாய்க்
காக்க வேணும்—நம்ம
சந்ததிக்கு நாங்களெலாம் பெருமை சேர்க்க வேணும்!

இருவரும்:—
நம்பளுக்குத் தமிழரசு ஒண்ணு வேணும்—செல்வ
நாயகத்தின் தலைமையில் நாம் சேரவேணும்!—இந்த
வப்பருக்கு ஏத்த பதில் சொல்ல வேணும்!—எங்க
வளமார்ந்த தமிழுக்கு வாழ்வு வேணும்!—எங்க
வளமார்ந்த தமிழுக்கு வாழ்வு வேணும்!—எங்க
வளமார்ந்த தமிழுக்கு வாழ்வு வேணும்!!

## எட்டப்பர்களின் கொட்டமடக்கிட எழுந்து விட்டது இளைஞர் படை!

தந்தை செல்வா தமது தளர்ந்த குரலில் கட்சிஸ்தாபிக்கப்பட்டமை பற்றிக் கூறினார்கள். தளபதி அமிர்தலிங்கம் கட்சியின் நெருக்கடியான நிலை பற்றியும் கட்சி தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் ஆற்றிய தொண்டுகள் பற்றியும் நீண்ட நேரம் உணர்ச்சி வசப்பட்ட முழக்கத்துடன் விளக்கம் கொடுத்தார். அத்துடன் பொதுமக்கள் வினவியவினாக்களுக்கும் விளக்கமாக விடை பகர்ந்தார்கள்.

கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது 'சிங்களம் படிப்பதால் மொழியறிவேயன்றி வேறொரு பயனுமில்லை. சிங்களம் படித்தால்வேலைவாய்ப்புண்டு என்பது வெறும் பகற்கனவு, சிங்களம் படித்தால் வேலைவாய்ப்புக் கிடைக்குமாயின் இலங்கையில் பதின்மூன்றுயிரம் வேலையற்ற சிங்களப்பட்டதாரிகள் இருக்கின்றார்களே அவர்க

திரு: இராஜதுரை அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:— திரு. தேவநாயகம் அவர்கள் பனிச்சங்கேணியில் தாம் ஒரு பாலம் போட்டுவிட்டதாகத் தம்பட்டமடித்துத் திரிகின்றார். அதைத் தமது தேர்தல் கருவியாகவும் பயன்படுத்துகிறார். அப்பாலம் தமது 'சாதனை' எனப் புழுகும் அவருக்குக் கூறுகின்றேன். திரு. மாணிக்கவாசகர் அவர்கள் கற்குடாப் பிரதிநிதியாகவிருந்த காலத்திற்றான் பனிச்சங்கேணிப் பாலம் அமைப்பதற்கு உறுதி கூறப்பட்டது. அன்றே அதற்கான வேலைகள் ஆரம்பமாகத் தொடங்கின. அதை அவர் உணர்தல் வேண்டும்'' என்று கூறினார். இவ்வாறு தமிழரசுத் தலைவர்கள் கொடுத்த விளக்கங்களையும், கூறிய உண்மைகளையும் கேட்டுக்கொண்டிருந்த எதிர் வேட்பாளரின் ஆதரவாளர்கள் சிலர் கூட்டம்

கட்சியைச் சார்ந்துவிட்டனர்.

இலங்கையில் தமிழ்பேசும் மக்களுக்காகப் பாடுபடும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே யென்றும், சிங்களக் கட்சிகளுடன் போட்டி போட்டு வாதாடித் தமிழர் தம் உரிமையைப் பெற்றுத் தந்த—பெற்றுத் தருகின்ற—பெற்றுத்தரப்போகின்ற ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே யென்றும், தமிழ் நாட்டில் தி. மு. க. செய்யாதவற்றைக்கூட இலங்கையில் செய்து முடித்த தீரமிக்க கட்சி தமிழரசுக்கட்சியென்றும் அவர்கள் கூறுவதை நாம் காதாரக் கேட்க முடிகிறது.

பாவம் இப்போதாவது தமிழரசுக்கட்சியின் உயர்ந்த கொள்கைகளையும், ஏனைய தமிழ்க் கட்சிகளினதும், அரசினரினதும் கபடநாடகங்களையும் உணர்ந்துவிட்டார்களே — அந்த அளவில் திருப்தி.

## வினா? விடை

வினா:

சமஷ்டி அரசமைப்பென்றாலென்ன?

விடை: ''சமஷ்டி'' அரசமைபென்ற கொள்கையை முன்வைத்து, தமிழரசுக் கட்சியினர் கடந்த பல ஆண்டுகளாக தமிழ்பேசும்மக்களில் பெரும்பான்மையோரது ஆதரவைப்பெற்று வந்திருக்கின்றனர் — இந்த அரசமைப்பு எதைக் குறிக்கின்றது? நாட்டு பிரிவினைக்கு இப்படியும் ஒரு புதுப் பெயரா? இப்படி அரசியல் விரோதிகளும், அரசியல் அறியாத பாமர மக்களும் தமக்குள்ளே பல கேள்விகளைக் கேட்டுக் கொள்கிறார்கள்;

சிங்கள மக்களுக்கு சில சமயம் இது தனித் தமிழ் நாடாகவும், தமிழ்க் காங்கிரசாருக்கு இது அர்த்த மற்ற கொள்கையாகவும் படுகிறது. ஆனால் உண்மைக் கருத்தை உவமை மூலம் சொல்வது தானே எம் அண்ணா மரபு;

கொழும்பில் வெள்ளவத்தையிலே, ஒரு பெரிய வீடு என்று வைத்துக்கொள்ளுங்கள். எல்லாமாக அதில் எட்டு அறை, நாலு மலசல குளியல் அறை இரண்டு கார் காராச்சும் இரண்டு தனித் தனியான படலையும் வீட்டுக்குண்டு. இந்த விட்டை இரு குடும்பம் சேர்ந்து வாடகைக்கு எடுத்துள்ளது ஒன்று சிங்களக் குடும்பம். இது சற்றே பெரிய குடும்பம். தாய், தகப்பனை விட ஏழு பிள்ளைகள்-உருப்படி எல்லாமாக ஒன்பது-மற்றையது தமிழ்க் குடும்பம். தாய் தந்தையை விட குழந்தைகள் மூவர், எல்லாமாய் உருப்படி ஐந்து.

இந்த இரு குடும்பமும் அந்த வீட்டில் தனித்தனியாக, ஒரு புறத்து மூன்று அறையையும் தமிழ் குடும்பமும், மறுபுறத்து ஐந்தறையை சிங்களக் குடும்பமும் முறையே உபயோகிக்கின்றனர் இரண்டு குடும்பத்துகார்களையும் விட இரண்டு கராச்சு உண்டல்லவா? தனித் தனியே இரு குடும்பமும், சமைத்துச் சாப்பிட்டு குளித்து குதூகலிக்கின்றன. இரு பகுதியினரும் ஒரே கூரையின் கீழ் ஒரே குடும்பம் போல் ஐக்கியமாய் வாழுகின்றனர். என்னே ஒற்றுமை பிரிந்து வாழ்ந்தாலும் அந்தப் பிரிவில் எத்தனை ஒற்றுமை! ஒரு வீட்டில் வெள்ளிக்கிழமை காலையில் தேவார ஒலி, அதே வீட்டில் போயா நாள் மாலை புத்த பகவானதுபுனிதப் போதனை இப்படியாய் வாழும் இவர்கள் டெலிபோன் காசையும், மின்சார சிட்டைக் காசையும் தனியே வீட்டுக் காரரிடம் கட்டிவிடுகிறார்கள்.

இதுதான் சமஷ்டி ஆட்சி, ஒரே இலங்கையில், அதுவும் ஐக்கிய இலங்கையில் இரு இனமும் ஐக்கியமாக வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஆட்சியே சமஷ்டி ஆட்சி, ஒரே கூரையின் கீழ் இரு குடும்பம், இருவேறு மொழி பேசும் குடும்பம், இன்பமாக தத்தமது மொழியைப் பேசி தமக்கான நடையுடை நாகரீகத்தோடு நட்புறவு கொண்டு வாழ்வதைப் போல், ஈரின மக்கள் இணைந்து வாழும் அரசமைப்பே சமஷ்டி ஆட்சி யெனப்படும்.

விளக்கம் அளிப்பவர்:

வழக்கறிஞர் மு. திருநாவுக்கரசு

சுதந்திரன்
SUTANTIRAN

## வவுனியாத் தொகுதியில் ஆயிரக்கணக்கானோர் வேலையின்றி தவிக்கையில்....

# பண்டாரவன்னியன் ஓட்டு தொழிற்சாலைக்கு பண்டாரவளையிலிருந்து சிங்களவர் இறக்குமதி!

வவுனியா தொகுதியைச் சேர்ந்த ஒட்டுசுட்டானில் நிறுபட்டுள்ள பண்டாரவன்னியன்ஒட்டுத்தொழிற்சாலையில்அண்மையில்காலியான இரு வேலைகளுக்கு பண்டாரவளையைச்சேர்ந்த இரு இளைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான படித்த தமிழ் இளைஞர்கள் இங்கு வேலையில்லாமலிருக்க வெளியூரிலிருந்து சிங்களவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சம்பவம் இத்தொகுதி மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இது விஷயமாக முன்னாள் பா. உ. திரு. சிவசிதம்பரம் என்ன செய்யப்போகிறார் என்று அவர்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றனர்.

ஒட்டுசுட்டானில் நிறுவப்பட்டிருக்கும் தேசிய கைத்தொழில் கூட்டுஸ்தாபன ஒட்டுத் தொழிற்சாலைக்கு 13-3.70ந் திகதி பண்டாரகமைத் தொகுதியிலிருந்து 2 சிங்கள இளைஞர்கள்வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதைஅறிந்த இவ்வூர்வாசிகளும் அயல் கிராமமக்களுமாகிய முள்ளியவளை தண்ணீர் ஊற்று இளைஞர்களும் ஆற்றொணு வேதனைப்படுகின்றார்கள். இத்தொகுதியிலே எத்தனையோ படித்த இளைஞர் இன்று வேலைக்கலைந்து திரிகின்றார்கள். இத்தொகுதி மாஜி எம். பியின் வீட்டுப்படலையையும் எத்தனையோ தடவைகள் திறந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இங்கு வேலையில்லை.

ஆனால் பண்டாரவளைப் பகுதி வாலிபர்கள் இங்கு வந்துவேலைசெய்கின்றார்கள். இது விபரமாக ஊர் மக்கள் முன்னாள் எம்.பிக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத்தெரியவில்லை.

மேற்படி ஸ்தாபனத்தின் தலைவர் இதுபோன்ற எத்தனையோ தொழிற்சாலைகள் சிங்களத் தொகுதியில் இருந்தும் வவுனியாத் தொகுதியில் உள்ள தொழிற்சாலைக்கு ஆட்களை அனுப்புகின்றார் என்றால் இதன் நோக்கம் என்ன? இவற்றிற்கெல்லாம் இடம்கொடுத்தவர்கள் யார்? இப்படியெல்லாம் ஊர்மக்கள்பேசுகின்றார்கள்.

இவ்நியமனங்களை உடனே ரத்துச்செய்யும்படி மக்கள் சிறுகைத்தொழில் அமைச்சருக்கும், தலைவருக்கும் முன்னாள் எம்.பிக்கும் மகஜர்கள் அனுப்புவதற்கு ஆயத்தம் செய்கிறார்கள்.

முள்ளியவளையில் வசிக்கும் ஒருவர்தான் முன்னாள் எம். பி. க்கு எழுதிய கடிதத்தை அடுத்த கிழமை சுதந்திரன் பத்திரிகைக்கு அனுப்புவதற்குத் தருவதாகக் கூறியதுவுமல்லாமல் கீழ்க்கண்டவாறும் கூறியுள்ளார்:

வன்னித் தொகுதியின்முன்னாள் பா.உ. இதுவிடயத்தில் கவனம் செலுத்தாதுவிட்டால் இவ்வூர் மக்களாகிய நாம் மும்முரமாக இதை எதிர்ப்பதற்குஏற்றநடவடிக்கையில் இறங்கவேண்டும்.

தற்போது மேற்படி ஸ்தாபனத்தின் தலைவர்என இருப்பவர்வன்னி ஒட்டுத்தொழிற்சாலையில் உள்ள தகுதிவாய்ந்த உத்தியோகங்களுக்கு இவ்வூர் இளைஞர்கள் யாரையேனும் தெரிவு செய்ததுண்டா? இது விடயம் திரு. சிவசிதம்பரத்துக்கு தெரியாதா? அதுதான் போகட்டும், தற்போது இங்கு உள்ள கூலிவேலைகளுக்குகூட எங்கள் இளைஞர்கள் தகுதியற்றவர்களா?

முன்னாள் பா. உ. இது பற்றி இனிக்கவனம் செலுத்தமாட்டார். எனவே இவ்வூர்வாசிகளாகிய நாமே எங்கள் குறைகளைக் களைவதற்கு அணிதிரண்டு ஆணவக்காரரின் மூர்க்கத்தனத்தைத் தவிடுபொடியாக்க போராட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

### பொன்னர் மொழிகள்!

'சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்துக்கு ஆதரவளித்ததன் மூலம் ஐந்தேகால் இலட்சம் மலைநாட்டுத் தமிழரை நாடு கடத்த தமிழரசுக்கட்சி உதவி புரிந்துவிட்டது. இது மிகப் பெரிய நஷ்டம்.

—ஜீ. ஜீ. (டெயிலி மிரர் 24-3-70)

'யாழ்ப்பாணத்துத் தமிழர்களுடன் தோட்டப்பகுதி தமிழர்களை ஒன்றுக இணைப்பதற்கு முயற்சி செய்வது அவர்களுக்கு சேவையாக ஆகாது. இதனால் எங்களுக்கு நன்மை இல்லை. தோட்டப் பகுதி தமிழ் மக்களின் ஆபத்தானவர்கள் தாங்கள் தான் என வெளியில் காட்டிக் கொள்வது அவர்கள் ஒரு ஆபத்தான சக்தி என்ற எண்ணத்தை உருவாக்கி விடும்.

—ஜீ. ஜீ. (வீரகேசரி 2-4-70)



### அத்தானின் மண்டபம்

'அத்தான்..............'

'கண்ணே............'

சிங்களவரை எதிர்த்தால் சிங்களவரின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டி ஏற்படும். அவர்களை நாம் எதிர்க்கக் கூடாது என்று பொன்னம்பலம் சொல்லியிருக்கிறாரே!'

'ஆமாம் கண்ணே...!'

'அப்படியானால் எதையும் எதிர்க்காமல் பேராடும் ஒரு புது ரகமான போர் வீரரா பொன்னம்பலம்?'

'ஏன் கண்ணே...அவர்தான் தமிழருக்கு ஒரு தமிழரசு தரும் சமஷ்டியை எதிர்த்திருக்கிறாரே ... தமிழருக்கு பிரதேச சபை தர இருந்த பண்டாரநாயகா: செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்திருக்கிறாரே! தமிழர்புரிந்தவீரப் போரான சத்தியாக்கிரகத்தை எதிர்த்திருக்கிறாரே! தமிழர் நடத்திய சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை எதிர்த்திருக்கிறாரே...தமிழினம் சுதந்திரதினத்தைப் பகிஷ்கரித்து செய்த கடையடைப்புப் போராட்டத்தை எதிர்த்திருக்கிறாரே... சிறுபான்மைத் தமிழருக்கு யாழ் மாநகர சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்கும் மார்ட்டின் அறிக்கையை எதிர்த்திருக்கிறாரே... தமிழர் தலைநகரான திருமலைக்கு தமிழ்ப் பல்கலைக்கழகம் வர இருந்ததை எதிர்த்திருக்கிறாரே... தமிழனுக்கு ஓரளவு தற்பாதுகாப்புத் தர இருந்த மாவட்டசபையை எதிர்த்திருக்கிறாரே......

'போதும் அத்தான்... இந்த மனிதன்தான் தமிழினத்தின் முதல்எதிரி. இந்த ஆளை எதிர்த்து முறியடித்து மூலையில் உட்கார வைப்பதற்கு நாம் எடுப்போம் உறுதி!'

# இந்தி வெறியருக்கு எதிராக தி. மு. க. எம். பீக்கள் போர்க்கோலம்!

—புதுடெல்லி ஏப்—5

டெல்லிப் பாராளுமன்றத்தில் இந்தி வெறியர்களைச் சாடுசாடென்று சாடினார் தி. மு. க. எம்பியான திரு. கந்தப்பன்:

தபால் தந்தி இலாகா துணை மந்திரி திரு. ஷெர்ஸிங் லோகசபையில் ஒரு கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் கூற ஆரம்பித்த பிறகும் ஜனசங்க உறுப்பினர் திரு. ஓங்கார்லால் பெர்வா தமது கேள்விக்கு இந்தியில் தான் பதிலளிக்க வேண்டுமென வற்புறுத்தியதால் சபையில் பரபரப்பு ஏற்பட்டது.

மந்திரி இந்தியில் பதலளிக்கவேண்டுமென திரு. பெர்வா கோரியவுடன் தி. மு. க. உறுப்பினர் திரு. எஸ். கந்தப்பன் எழுந்து, இந்தக் கோரிக்கை தவறானது என்றும் தமிழ்நாட்டுக்கும் இந்தி ஸ்தல மொழியாக இல்லாத மற்ற பகுதிகளுக்கும் நேர்மையாகாது என்றும் கூறினார். இந்தியில் பேசுவதை ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தில் பேசுவதை இந்தியிலும் மொழி பெயர்க்க சபையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

திரு. பெர்வாவும், மற்றொரு ஜனசங்க உறுப்பினரான திரு. ராம்கோபால் ஷல்வாலேயும் தங்கள் ஆசனத்திலிருந்து எழுந்து, திரு. கந்தப்பனுக்கு மேல் அதிகமாக சத்தம் போட்டு, இந்தியில் தான் மந்திரி பதிலளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர்:

திரு. கந்தப்பன் தமது குரலை உயர்த்தி இதை தாம் சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்று கூறினார். ஆங்கிலத்தில் பதில் கூறப்படும் போதெல்லாம் உறுப்பினர்கள் எதற்காக ஆட்சேபம் எழுப்பவேண்டும் என்று அவர் கேட்டார்.

சபாநாயகர் திரு. தில்லால் குறுக்கிட்டு தி. மு. க. உறுப்பினர்களை சமாதானப் படுத்த முயன்றார். இது பலனளிக்கவில்லை.

திரு. கந்தப்பன் மேலும் பேசுகையில் மொழிப் பிரச்சினையில் தமிழ்நாடு உறுப்பினர்களின் உணர்ச்சியை இந்தி பேசும் உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறினார். தமிழ் நாட்டு உறுப்பினர்கள் இந்தி பேசாத இதர பகுதி உறுப்பினர்கள் விஷயத்தில் அவர்கள் கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும். சபையில் எதையும் இந்தியில்தான் சொல்ல வேண்டும் என்று கேட்பது மிகமிக தப்பான பழக்கமாகும் என்றும் அவர் வாதாடினார்.

### யூ. என். பி—சமசமாஜி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டித் தொகுதியைப் பொறுத்த அளவில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருப்பதாக இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது. இதனால்தான் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இத்தொகுதியில் மோதியே தீருவதென்று சமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளதாம்.

இலங்கையின் வேறு எந்தத் தொகுதியிலும் கூட்டணிக் கட்சிகள் தங்களுக்குள் மோதிக்கொள்ளவில்லை. உடுப்பிட்டி தொகுதியில் மட்டும்தான் கம்யூனிஸ்ட் — சமாசமாஜ மோதல் ஏற்பட்டிருக்கிறது. இம் மோதலுக்குக் காரணம் தமிழ் காங்கிரசுக்கும் சமசமாஜக் கட்சிக்கும் உடுப்பிட்டித் தொகுதி பற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதேயென்று கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு விட்டுக் கொடாமல் சமசமாஜக் கட்சியும் தனது வேட்பாளரை உடுப்பிட்டித் தொகுதிக்கு நிறுத்துவதென்றும் பொதுத்தேர்தல் அண்மித்து வரும் நாட்களில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக சமசமாஜ வேட்பாளர் விட்டுக்கொடுத்து பின்வாங்குவதென்றும் இதன் மூலம் தமிழரசு, கம்யூனிஸ்ட் வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்புக்களை சிதறடிப்பது என்றும் திட்டமிடப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.ய

உடுப்பிட்டித் தொகுதியில் யூ. என். பி. யின் வாலான காங்கிரஸ் வெற்றி பெற்றாலும், கம்யூனிஸ்ட் அல்லது தமிழரசு வேட்பாளர் வெற்றிபெறக் கூடாதென்பதில் சமசமாஜக்கட்சி அதிக அக்கறை காட்டுகிறதாம்— இந்த விசித்திர போக்கு பற்றியே இங்கு பேசிக் கொள்ளப்படுகிறது.

### கேள்வியும் பதிலும்!

'1952 முதல் இன்றுவரை சமஷ்டிக்கட்சியே திருகோணமலைக்கு பிரதிநிதித்துவம் வகிக்கின்றது. திருகோணமலையில் சிங்களவர்கள் குடியேறுவதை எதிர்த்து திரு. செல்வநாயகம் அல்லது அவரது கட்சி அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் அல்லது வெளியில் குரல் எழுப்பினார்கள் என்று திரு. செல்வநாயகம் சொல்லத்தயாராக இருக்கிறாரா?

—ஜீ. ஜீ (தினகரன் 26.2 70)

'தமிழரசு வாதிகள் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு சிங்களவர்கூட குடியிருக்கலாகாது எனக்கூச்சல் போடுகிறார்கள்.

—ஜீ. ஜீ (வீரகேசரி 2.4.70)

### சுயநிர்ணய உரிமை கோரிக்கை வலுவடைகிறது!

கிழக்கு பாகிஸ்தானுக்கு சுயநிர்ணய உரிமைவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தொடர்ந்து போராடுவதற்கு அவாமிலீக் கட்சிமுடிவுஎடுத்திருக்கிறது.

அவாமிலீக்கின் சுயநிர்ணக்கோரிக்கையின்படி பாதுகாப்பு, வெளிவிவகாரம் தவிர்ந்த ஏனைய சகல அதிகாரங்களும் கிழக்கு பாகிஸ்தானுக்கு இருக்கவேண்டும் —என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

### சிங்களத் தலைவர் சுதந்திரன் படிக்கின்றனர்

(கொழும்பு நிருபர்)

அடுத்து வரும் பொதுத் தேர்தலில், எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மைப் பலம் கிடையாது என்பது இன்று பகிரங்க இரகசியமாகி விட்டது.

இந்நிலையில் சிங்கள அரசியல் வாதிகளும், பிரமுகர்களும், சுதந்திரனை வரிக்கு வரி படித்தும்—அதன் ஆசிரியத் தலையங்கத்தை மொழிபெயர்த்தும் தமிழரசுக்கட்சியின் நாடி ஓட்டத்தைக் கணிக்க முற்படுகிறார்கள் என்ற சுவையான செய்தி எட்டியுள்ளது.

இப்படிச் சுதந்திரனைப் படித்து தமிழரசுக் கட்சி எந்த ஒரு அரசியல் கட்சியையும் மனமார ஆதரிக்காத நிலை கண்டு சிங்களத் தலைவர்கள் தமிழினத்தின் போக்கைப்புரிந்து கொள்ளவென தூது கோஷ்டிகளை யாழ்ப்பாணமும் மலையகமும் அனுப்ப இருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகவீதி, 194 ஏ இல்லத்தில் 1970.ம் வருடம் ஏப்பிரல் மாதம் 8-ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்